58—

விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

*22044—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் அரசு மாணவர் விடுதிக்கு அருகில் மயானம் இருப்பதால் விடுதியில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க சுற்றுச்சுவர் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சுற்றுச்சுவர் கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): துறையூர் அரசு மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பரிசீலனையில் உள்ளது என்று கூறியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 59, திரு. கி. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

59—

கால்நடை மருத்துவமனை அமைத்தல்

*87873—திரு. கி. பாலசுப்பிரமணியன்:

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சியில் கால்நடை மருத்துவ மனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[1996 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எம்.சி. தாமோதரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது உத்தேசமேதுமில்லை.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை வட்டம், கீழக்குறிச்சியில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டதற்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குறிப்பு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். இது நெடுங்காலமாக உள்ள பிரச்சினை. மதுக்கூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கீழக்குறிச்சியைச் சுற்றி ஆவிக்கோட்டை, நெம்மேலி, கன்னியாகுறிச்சி, ஒலையகுன்னம், மண்டலக்கோட்டை போன்ற பல ஊர்கள் சிற்றூர்களாக அமைந்துள்ளன. அங்கே கால்நடைகளுக்கு அடிக்கடி நோய்கள் வருவதால் குறிப்பிட்ட சில காலங்களில்தான் மருத்துவர் வந்து அதை நிவாரணம் செய்து விட்டுப் போகமுடிகிறது. அந்த நிவாரணம் போதுமானதாக இல்லை என்ற நிலையில்தான் மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்தார்கள். அதன் கருத்திலே நான் சென்ற ஆண்டு என்னுடைய கோரிக்கையை வைத்தேன். அதைப் பரிசீலனை செய்து தருமாறு மாண்புமிகு அந்த நாள் அமைச்சர் திரு. மதுசூதனன் அவர்கள் ஆணையிட்டார்கள். ஆணை இட்டிருந்ததில், மக்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் இந்த நாளிலும் அமைச்சர்தான், அந்த நாள் அமைச்சர் என்பது இல்லை. (சிரிப்பு) இந்த நாளிலும் அமைச்சர்தான்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: ஆமாம். அந்தத் துறை அமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அதற்கு சர்வே எல்லாம் எடுக்கப்பட்டது. அப்படிக் கால்நடைக் கணக்குகளைப் பார்க்கும்போது, பத்தாயிரத்துக்கு மேல் அது எட்டிப் பிடிக்கும். இந்த மாதிரி பருவகாலங்களில் கால்நடைகளுக்கு எப்போது எந்த நோய் வரும் என்று சொல்வதற்கு இல்லை. பருவகாலம் என்றால், மழைக் காலம் இருக்கிறது. பயிரிடும் காலம் இருக்கிறது. இப்படி வரும்போது, கால்நடைகள் மிகவும் அவதிப்படுகின்றன. இதை ஒரே இடத்திற்குக் கூட்டிச் சென்று வர வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன்: பட்டுக்கோட்டைக்குப் போக வேண்டியிருக்கிறது. ரொம்ப தூரம் போகவேண்டியிருப்பதால் கால்நடைகளையும் எடுத்துச் செல்ல முடியவில்லை. இந்த மாதிரி இக்கட்டான

நிலையிலே இந்தக் கோரிக்கையை இந்த அரசாங்கம் மறுபரிசீலனை செய்து, அதே இடத்தில் வேண்டிய மருத்துவ வசதிகளை நிரந்தரமாக அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். சி. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, அந்தக் கிராமம் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் உள்ள இடைப்பட்ட தூரம், இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு, கிராமங்களில் புதிதாக கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. கீழக்குறிச்சி கிராமத்தைச் சுற்றி 10,000 கால்நடைகளுக்கு மேல் உள்ளதால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் அந்தக் கிராமத்திற்குப் புதிதாக கால்நடை மருந்தகம் தேவை என்றும், இலவசக் கட்டிடம் தருவது உட்பட, தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொரு துணைக் கேள்விதான் என்று முன்பே சொன்னேன்.

வினா எண் 60, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

60—

இந்து சமய அறநிலையத் துறையின் ஆலயங்கள்

*40033—**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்கள் எத்தனை?

(ஆ) கட்டுப்பாட்டுக்குள் வராத இந்துக் கோயில்கள் எத்தனை உள்ளன?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு. பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை மொத்தம் 35,477 ஆகும்.